بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 3	1926௵ ஜூலை௴	பகுதி. 7

கலீபாக்களின் நியமன வரலாறு.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தானவுடனேயே கிலாபத்துப் பதவியை யொட்டிய விவாதமேற்பட்டு விட்டதும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை யடக்கம் செய்தபின்னர் கிலாபத் சம்பந்தமான பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாமென்று ஸஹாபாக்களால் கருதப்படாததும் வருந்தத் தக்கவைகளே. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின்மீது அதி நட்பும் விசுவாசமுமுள்ள நண்பர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தானவுடனேயே நாயகம் அவர்களை நல்லடக்கம் செய்யவேண்டிய காரியத்தையொட்டி கவனஞ் செலுத்துவதைவிட்டு கிலாபத்துப் பதவியை மற்றோர் கைப்பற்றிவிடாது வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்ய முற்பட்டுவிட்டது, எவரும் எதிர்பாராத காரியமேயாகும். மேலும் இச்சம்பவங்கள் தோற்றத்தில் ஆச்சர்யத்தை மூட்டக் கூடியனவாகத் தானிருக்கின்றன. இஸ்லாமிய வானத்தின் சந்திரன்களென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் பெரியார்களான ஹஜ்ரத் அபூபக்கர், உமர்ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியவர்களே இந்நிகழ்ச்சிக்கு முக்கிய கர்த்தாக்களாக விருந்தார்களென்னும் செய்தியும் கவலைகொள்வதற்குரியதே யாகும். அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் "பனீஹாஷிம்" என்னும் வகுப்பார்க்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோடுள்ள இயற்கைச் சம்பந்தமானது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தான விசனம், அவர்களை நல்லடக்கம்

செய்யவேண்டிய பொருப்பு ஆகியவைகள் இவர்களை கிலாபத்துப் பதவியையொட்டிய விவாதத்தில் கலந்துகொள்ள முடியாமல் தடுத்திருந்தனவென்று அறிவிக்கப்படும்போழ்து நிலைமை அதிவிபரீதமாகத் தோன்றுவது நியாயமே. ஹதீதுஷரீபின் கிரந்தங்களையும், ஸியர் என்னும் சரித்திரங்களையும் மேலெழுந்தவாரியாய் வாசிப்போமாயின் நாமும் மேற்கூறியவாறே அபிப்பிராயப் படவேண்டித்தானிருக்கும். ஆனால் உண்மை அவ்வாறல்ல.

ஹஜ்ரத் அபூபக்கர், உமர் ரலியல்லலாஹு அன்ஹுமா முதலிய பல பெரிய ஸஹாபாக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நல்லடக்கம் செய்யவேண்டியதைவிட்டு "ஸகீபாபனீ ஸாமதா" என்னுமிடத்திற்குச் சென்றுவிட்டார்களென்பதும், அன்ஸாரிகளையும், பனீஹாஷிம் வகுப்பார்களையும், அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் கட்டாயப்படுத்தி அப்பெரியார் தங்களின் கிலாபத்தை ஒப்புக்கொள்ளச் செய்தார்கள் என்பதும் உண்மையே. பனீஹாஷிம் வகுப்பார் ஆபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத்தை இலகுவில் ஒப்புக்கொள்ளவில்லையென்பதும் மிறுக்கத்தக்கதன்று. ஆனால், அடியிற்கண்ட விஷயங்களை ஆராய்ச்சி செய்வது அத்யாவசியமாகும்:—

(1) முதன் முதலாக கிலாபத்தை யொட்டிய பிரச்னையைக் கிளப்பிவிட்டது. ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களைச் சார்ந்தோர்களுமா?

(2) உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களாகவே "ஸ்கீபாபனீஸாயிதா" வுக்குச் சென்றார்களா?

(3) ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களும் "பனூ ஹாஷிம்" வகுப்பாரும் கிலாபத்துப்பதவி சம்பந்தமான கவலையைக் கொள்ளவில்லையா?

(4) அவ்வமயத்தில் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு முதலியோர் புரிந்தகாரியம் புரியத்தக்கதா? தகாததா?

மேற்கூறப்பட்டுள்ள ஒன்று, இரண்டு, வினக்கள் சம்பந்தமாக, அதி ஆதாரமான 'மஸ்னத் அபூயஃலா' என்னும் கிரந்தத்தில் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக வறையப்பட்டிருப்பதாவது:—"நாங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கிரகத்தில் வீற்றிருந்தபொழுது திடீரென ஒருவர் சுவற்றிற் கப்புறமிருந்து கொண்டு 'இப்னுகத்தாப்! (ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களே!) சற்று வெளியே வாருங்கள்,' என்றார். அதற்கு நாங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்களை நல்லடக்கம் செய்வதை யொட்டிய காரியத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். தாங்கள் அப்புறப்படுங்கள், என்று அறிவித்தேன். மீண்டுமவர் ஓர்பெரிய சம்பவம் ஏற்பட்டிருக்கின்றது. அஃதாவது அன்ஸாரிகள் ஸகீபாபனிஸாயிதா வென்னுமிடத்தில் கூடியிருக்கின்றனர். ஆதலின் யுத்தத்தை மூட்டத்தக்க காரியங்களை அன்ஸாரிகள் புரிந்துவிடாமலிருக்கும் பொருட்டு தாங்கள் உடனேசென்று அவர்களின் நடத்தையை கவனிக்கவேண்டும் என்றார். அவ்வமயம் நான் ஆபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி 'பனீஸாயிதா'வுக்குச் செல்லுவோம் நடங்கள், என்று கூறினேன்" என்பதே.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு முதலியோர் கிலாபத்துப் பிரச்னையைக் கிளப்பிவிடவில்லையென்றும் அவர்கள் தாங்களாகவே 'ஸகீபாபனீஸாயிதா'வுக்குச் செல்லவில்லையென்றும் இக்கிரந்தத்தின் மூலமாய் அறியக்கிடைக்கின்றது.

மூன்றுவது பிரச்னையைக்குறித்து தெரிந்துகொள்ளவேண்டிய செய்தி வருமாறு:—நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாததான காலை முஸ்லீம்கள் மூன்று வகுப்பினர்களாக விருந்தனர்.

I-வது வகுப்பு பனூஹாஷிமாகும்.—இவ்வகுப்பாருள் ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அவர்களும் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

II-வது முஹாஜிரீன் என்னும் வகுப்பாராகும்.—ஹஜ்ரத் அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகியவர்கள் இக்கூட்டத்தின் தலைவர்களாகும்.

III-வது வகுப்பு 'அன்ஸாரி' யாகும்—"ஸஃத்" ரலியல்லாஹு அன்ஹுவர்கள் அன்ஸாரிகளின் தலைவராகவிருந்தார்கள். இம்மூன்று கூட்டங்களுள் ஒன்றேனும் கிலாபத்துப் பதவியை யடையவேணுமென்ற எண்ணத்தை விட்டு விலகியிருக்கவில்லை. ஆனால் அன்ஸாரிகளோவெனில் தங்கள் எண்ணத்தை பகிரங்கப் படுத்திவிட்டனர்.

பனூஹாஷிம் வகுப்பாரின் அபிப்ராயத்தை அடியிற்கண்ட செய்தியின் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம், அஃதாவது:—"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'வபாத்' தாகும் தினத்தன்று ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினுர்கள். அவ்வமயம் ஜனங்கள் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களைநோக்கி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தேகஸ்திதியைப்பற்றி விசாரித்தார்கள். அதற்கு

"அல்லாஹுத ஆலாவின் கிருபையால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் குணமடைந்துவிட்டார்கள்," என்று அலீரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விடையளித்தார்கள். ஆனால் ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கையைப்பிடித்து "அல்லாஹுத ஆலாவின்பேரில் சத்தியமாக தாங்கள் மூன்று நாளைக்குப்பிறகு அடிமையாக விருப்பீர்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வியாதியிலேயே அதிசீக்கிரத்தில் 'வபாத்' தாகிவிடுவார்கள், என்பதை நான் என் கண்களால் காணுகின்றேன். ஆகவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தையடைந்து அவர்களுக்குப்பிறகு கிலாபத்துப்பதவி யாருக்குக்கிடைக்குமென்று கேட்டுக்கொள்ளுவோம், வாருங்கள்; நாம் இப்பதவிக்கு அருகமுள்ளவர்களாயின் நமக்காக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'வஸிய்யத்துச்செய்வார்கள், என்று அறிவித்ததற்கு அலீரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "நான் கேட்கமாட்டேன். ஏனெனின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இக்கேள்வியைச் செவியுற மறுத்துவிடுவார்களாயின் பின்னர் எத்தகைய நம்பிக்கைக்கும் மார்க்கமில்லாதுபோகும்" என்று கூறிவிட்டார்கள்."

மேலே அறிவிக்கப் பட்டிருக்கும் ரிவாயத்தின் மூலமாய் ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அபிப்பிராயத்தை விளங்கக்கிடக்கின்றது. மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'வபாத்' தாவதற்முன் அலீரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுக்கு கிலாபத்துப்பதவியைக் கோருவது உசிதமல்லவென்று கருதியதாயும் தெரிகிறது. ஏனெனின்? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்களை கலீபாவாக ஏற்படுத்துவார்களென்னும் நம்பிக்கை அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கில்லை. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிஸல்லம் அவர்கள் 'வபாத்' தானபிறகு ஹஜ்ரத் பாத்திமாரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டில் ஒரு கூட்டம் நடை பெற்றது. பனூஹாஷிம் வகுப்பைச்சார்ந்த எல்லோரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அலீரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் அக்கூட்டத்தின் முக்கியஸ்தர்களாக விருந்தார்கள்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக 'ஸஹீஹ்புகாரி'யில் வரையப்பட்டிருப்பதாவது:—" அல்லாஹுத ஆலா நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை எங்களை விட்டுப்பிரித்த போழ்து அன்ஸாரிகள் எங்களை எதிர்த்து "ஸகீ

பாபனீஸாஹிதா"வில் கூட்டம் கூடினார்கள். அலீ ஜுபைர் ரலியல் லாஹு அன்ஹுமா ஆகியவர்களும் அவர்களைச் சார்ந்தோரும் எங்களுக்கு மாறுசெய்தார்கள். முஹாஜிரீன்கள் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கூடினார்கள். இதுவே எங்கள் ஆரம்ப வரலாறாகும்" என்பதே.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இப்பிரசங்கத்தை ஒரு பெரும் கூட்டத்தினிடையே புரிந்திருக்கின்றார்கள். அக்கூட்டத்தில் எண்ணிறந்த ஸஹாபாக்கள் கலந்திருந்தனர். ஆகவே உண்மைக்கு விரோதமான எவ்வார்த்தையையும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருப்பார்களென்னும் சந்தேகத்திற்குக்கூட இடமில்லை. மேலும் நிகழாதவற்றை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருப்பார்களாயின் ஜனங்கள் அவ்வமயமே தடுத்திருப்பார்கள். இமாம் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தின் மூலமாய் இவ்விஷயம் இன்னும் தெளிவாகி விடுகின்றது. அஃதாவது :—"அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் 'ஜுபைர்' ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் ஹஜ்ரத் பாத்திமாரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டில் பிரத்தியேகமாய்க் கூடியிருந்தார்கள்," என்பதே.

திப்ரியில் வரையப்பட்டிருப்பதாவது:—

"ஹஜ்ரத் அலீரலியல்லாஹுஅன்ஹு, ஹஜ்ரத் ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு ஆகியவர்கள் பிரத்தியேகமாகவிருக்க வாரம்பித்தார்கள். மேலும் ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உறையிலிருந்த வாளையுருவிக்கொண்டு அலீரலியல்லாஹு அன்ஹு. அவர்களின் கரத்தில் "பைஅத்" (விசுவாஸப்பிரமாணம்) செய்யப் படாதவரை வாளை உறையிலிடமாட்டேன்," என்று அறிவித்தார்கள்.

மேற்கூறிய ரிவாயத்தின் மூலமாய் தெளிவாகும் விஷயங்களாவன :— (1) நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தானவுடனேயே கிலாபத்துப் பதவியையொட்டி முஸ்லிம்கள் 'அன்ஸார்,' 'முஹாஜிரீன்,' 'பனூஹாஷிம்' ஆகிய மூன்று வகுப்புக்களும் தனித்தனியே மூன்றுகூட்டங்களாகப் பிரிந்து விட்டனர்.

(2) முஹாஜிரீன்கள் ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹுஅவர்களையும், பனூஹாஷிம் ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் சார்ந்திருந்தனர்.

(3) ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களைவிட்டு ஸகீபாவுக்குச்

சென்று விட்டதைப்போலவே ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைவிட்டுச்சென்றுவிட்டார்கள். மேலும் ஹஜ்ரத்பாத்திமாரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டில் பனூஹாஷிம் வகுப்பாரின் கூட்டமும் நடைபெற்றது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தாகிவிட்ட விசனத்தை முன்னிட்டு ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸகீபாவிற்குச் செல்லவில்லையென்று கூறமார்க்கமில்லை. இத்தகைய பெரும் துக்கத்தினிடையே கிலாபத்துப் பதவியைக் கோரக்கூடிய எண்ணம் அவர்களுக்குப் பிறக்காததால் ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'ஸகீபா'விற்குச் செல்லவில்லை யென்று கூறவும்முடியாது. மேலும் ஸகீபாவில் முஹாஜிரீன்களும், அன்ஸார்களும் கூடியிருந்தார்கள் என்பதும் வெளிப்படை. இவ்விரு வகுப்பாருள் எவரும் ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கோரிக்கைக்கு ஆதரவளிப்பவராக இல்லாததே ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹுவர்கள் ஸகீபாவிற்குச் செல்லாததற்கு காரணமாகும். முஹாஜிரீன்கள் ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹுஅவர்களையும், அன்ஸாரிகள் 'ஸஃது' ரலியல்லாஹு அன்ஹுவர்களையும் தனித்தனியே தங்கள் தலைவர்களாக ஒப்புக்கொண்டிருந்தனர்.

எவ்வாறுயினும் கிலாபத்துப் பிரச்னையை யொட்டி அவ்வமயம் நடைபெற்ற காரியங்கள் உசித முள்ளனவா? அல்லது உசித மற்றனவா? ராஜீயமுறையைச் சிறிதளவேனும் அறிந்திருப்போர் இச்சம்பவத்தின் உசிதா உசிதத்தைப்பற்றிய உண்மையை நன்கறியக்கூடும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் விண்ணுலக மடைந்தபோழ்து மதினமாநகரத்தில் நயவஞ்சகக்கூட்டம் அபரிமிதமாகவிருந்தது. இந்நயவஞ்சகர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விண்ணுலகை யடைந்தபிறகு இஸ்லாமை யழித்து விடலாமென்று எதிர் பார்த்திருந்தனர். இத்தகைய சோதனைக்குரிய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் விசனங்காப்பது, விவாதித்துக் கொண்டிருப்பது முதலியவைகளில் ஈடுபட்டு நேரத்தைச் செலவிடுவதா? அல்லது கிலாபத்தை ஸ்திரப்படுத்தி நாட்டின் ஒழுங்கு முறையை நிலை நிறுத்துவதா? மேலும் அன்ஸாரிகள் கிலாபத்துப்பதவியைக் கோரி நிலைமையை அதிவிபரீதப் படுத்திவிட்டன ரல்லவா? அன்ஸாரிகளை குறைஷிகள் மிகத்தாழ்மையாக வெண்ணியிருந்ததை உலகமறியாதா? 'பத்ரு' யுத்தத்தில் குறைஷிகளை யெதிர்த்துப்போர் புரிவதற்காக

அன்ஸாரிகளிற் சிலர் யுத்தகளத்தில் முன்வந்தபோழ்து, "எங்களோடு சம அந்தஸ்தைப் பற்றிராதவர்களிடம் நாங்கள் போர்புரிய முடியா" தென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி குரைஷி வகுப்பைச்சார்ந்த 'உத்பா' அறிவித்ததை மறக்க வியலுமா? இத்தகைய கர்வமுள்ள குரைஷிகள், அன்ஸாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கச் சம்மதிப்பார்களா? குரைஷிகள் மட்டுமென்ன? பொதுவாகவே எல்லா அரபியர்களும் அன்ஸாரிகளுக்குக் கட்டுப்பட மறுத்து விடுவார்கள். ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'ஸகீபா'வில் புரிந்த 'குத்பா'வில் குரைஷிகளின் மனோநிலையை மிகத் தெளிவாய் விளக்கிக்காட்டி யிருக்கின்றார்கள். அஃதாவது:—

"இந்த 'அம்ரு' (ஆக்ஷி) குரைஷி யல்லாதவேறு வகுப்பிலேற்பட்டால், அதை 'அரப்' ஏற்றுக் கொள்ளமாட்டாது," என்பதே.

மேலும் அன்ஸாரிகளுள் 'உவஸ்' 'கஸ்ரஜ்'என்னும் நாமங்களைக் கொண்ட இருவகுப்புக் களிருந்தன. இவ்விரு வகுப்புகளுள்ளும் ஒற்றுமைக்குறைவு பலமாக விருந்தது. ஆகவே இத்தகை நிலையில் அன்ஸாரிகளின் கோரிக்கையைத்தள்ளி வேறு தக்கவர்களை கலீபாவாகத்தேர்ந்தெடுப்பது அத்யாவசியமான காரியமாக விருந்தது.

'ஸகீபா' வில் கூடியிருந்தவர்களுள் ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை விசேஷச் சிறப்பும், உயர்வும், செல்வாக்கு முள்ளவர்களாக விருந்தார்கள். மேலும் ஹஜ்ரத்தவர்கள் வயதிலும் பெரியாராக விருந்தார்கள். ஆகவே ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹுஅர்கள் எத்தடையுமின்றி இலகுவாகவே கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம். ஆனால் ஜனங்கள் அன்ஸாரிகளின் விவாதத்திலும், சச்சரவிலும் சிக்குண்டு விட்டனர். மேலும் விவாதம் அதிமும்மறமாய் வளர்ந்துபோயிற்று. வாளாயுதங்கள் உறையிலிருந்து வெளிக்கிளம்பவு மாரம்பமாயிற்று. இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் திடீரென்று ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் கரத்தை ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கரத்தில் வைத்து முதன் முதலாக யான் 'பைஅத்' (என்னும் விசுவாசப் பிரமாணம்) செய்கிறேனென் றறிவித்தார்கள். பின்னர் ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு, அபூஉபைதாஜர் ராஹ், அப்துர்ரஹ்மானிப்னு அவுப் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியவர்கள் தங்கள் தங்கள் கரத்தை முற்படுத்தி அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் 'பைஅத்' செய்தார்கள். பிறகு எல்லா ஜனங்களும் 'பைஅத்' செய்தார்கள்.

ஆகவே ஒரு பெரும் புயற்காற்றும் அபாயகரமான வெள்ளமும் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹுவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கபபட்டதன் மூலமாய் அடங்கிப்போயின. மேலும் ஜனங்கள் அடக்கமுற்று வேறுகாரியங்களில் கவனம் செலுத்த வாரம்பித்துவிட்டனர். ஆயினும் பனூஹாஷிம் வகுப்பார் கிலாபத்துப் பதவியை யொட்டிய தங்கள் கோரிக்கையைவிட்டுக் கொடுக்க இஷ்டப்படாதிருந்தனர். ஆதலின் இவ்வகுப்பார் ஹஜ்ரத் பாத்திமாலியல்லாஹு அன்ஹா அவர்களினில்லத்தில் அடிக்கடி கூட்டத்தை நடத்தி ஆலோசனை புரிந்துவந்தனர். பனூஹாஷிம் வகுப்பாரைக் கட்டாயப்படுத்தி 'பைஅத்' செய்விக்க ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கருதியதாயும் தெரிகிறது. ஆனாலிவர்கள் ஹஜ்ரத் அலீரலியல்லாஹு அன்ஹுவர்களைத்தவிர வேறு எவருக்கும் கட்டுப்பட முடியாமலிருந்தார்கள்.

"ரஸூலுல்லாஹ்வின் புதல்வியே! அல்லாஹு தஆலாவின்பேரில் சத்தியமாய்த் தாங்கள் எங்களெல்லோருக்கும் அதி உவப்புள்ளவர்களாகும். ஆயினும் தங்களில்லத்தில் ஜனங்கள் இவ்வண்ணமே கூட்டமிட்டுக் கொண்டிருப்பார்களாயின், கூட்டம் போடுகிறவர்களை முன்னிட்டு வீட்டிற்குத் தீ வைத்து விடுவேன்" என்று ஹஜ்ரத் பாத்திமாரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் வீட்டு வாயிலில் நின்றுகொண்டு ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹுவர்கள் கூறியதாக இப்னு அபீஷைபாமுஸன்னிபிலும், அல்லாமாதிப்ரீ அவர்கள் தாரீகெ கபீரிலும் வரைந்திருக்கிறார்கள். ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களினடக்கமற்ற சுபாவம், தீரம் ஆகியவைகளை நன்கறிந்தோர் ஹஜ்ரத் கூறியதாக மேலே வரையப் பட்டிருக்கும் வாக்கியங்களை முன்னிட்டு ஆச்சர்யப்படமாட்டார்கள். ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சிற்சிலசெய்கையும் வார்த்தையும் மிதமிஞ்சியனவாகத் தோன்றலாம். ஆனால் ஹஜ்ரத் அவர்களின் மிதமிஞ்சியதீரமே ஒரு பெரிய விபரீதத்தை யடக்கிற்று; என்னும் உண்மையை யெவரும் மறந்துவிடலாகாது. கிலாபத்துப் பதவியை யொட்டி பனூஹாஷிம் வகுப்பார் புரிந்த சூழ்ச்சியை ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அகற்றாதிருந்துவிடுவார்களாயின் இஸ்லாமியகோர்வை குலைந்து அன்றே முஸ்லிம்களுள் சமூகச் சண்டை யேற்பட்டிருக்குமல்லவா?

(தொடரும்)

இஸ்லாமும் சுயேச்சையும்

(23-வது பக்கத் தொடர்ச்சி)

[இமாமுல்ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களெழுதியது]

இஸ்லாமிய கிலாபத்தின் உண்மை வடிவத்தை யொட்டி ஹஜ்ரத் 'மஆது' ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விளக்கிக் காட்டியிருப்பதை நாம் உற்று நோக்க வேண்டும்.

மஆதிப்னுஜபல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பெரிய கௌரவமுள்ள ஸஹாபியாகும். ஹஜ்ரத் அவர்கள் ரோம் ஆட்சியின் தர்பாருக்கு ஒரு பிரதிநிதியாகச் சென்றிருந்தார்கள். அவ்வமயம் ரோம் ஆட்சியைச் சார்ந்த ஓர் உத்தியோகஸ்தர் கெய்லரின் உயர்வு, படாடோபம், அதிகாரம், ஆகியவைகளின் மூலமாய் ஹஜ்ரத் அவர்களுக்கு அச்சத்தை யூட்டக் கருதினர். ஆனால் முஸ்லிம்களின் இஸ்லாமிய நிறத்தை எத்தகைய சூழ்ச்சியினாலும் பேதகப்படுத்த வியலுமா? அல்லாஹுத ஆலாவின் உயர்வும், மகத்துவமும், குடிகொண்டிருக்கின்ற ஹிருதயமானது அல்லாஹ் அல்லாத சூழ்ச்சிகளை மதிக்க வியலுமா? ஹஜ்ரத் மஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாக்கள் அல்லது அமீர்களின் அதிகாரத்தை யொட்டி கூறியதாவது:—

"எங்களுள் ஒரு நபரே எங்கள் கலீபாவாகும். எங்கள் மதம், எங்கள் வேதம், எங்கள் நபியவர்களின் வழி ஆகியவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்வரையே, அவரை நாங்கள் எங்கள் கலீபாவாக வைத்திருப்போம்.

மேற்கூறியவாறு கட்டுப்பட்டு நடக்க இஷ்டப்படாத கலீபாவை கிலாபத்துப் பதவியினின்று தள்ளிவிடுவோம். கலீபா திருட்டுக் குற்றத்தைப் புரிந்தால் அவருடைய கரத்தை வெட்டிவிடுவோம். அவர் விபசாரக் குற்றத்தைப் புரிந்தாராயின், அவரை இடுப்புவரை பூமியில் புதைத்து கல்லாலடித்துக் கொன்றுவிடுவோம். அவர் எங்களுள் எவரையேனும் துர்ப்பாஷையாய்ப் பேசுவாராயின், அவ்வண்ணமே அவரும் துர்ப்பாஷையாய்ப் பேசப்படுவார். மேலும் அவர் எவருக்கேனும் காயமுண்டுபண்ணி விடுவாராயின், அவ்வண்ணமே அவருக்கும் காயமேற்படுத்தப்படும். எங்கள் கலீபா எங்களை விட்டு மறைந்து மாளிகை கோபுரம் முதலியவைகளில் வீற்றிருக்கமாட்டார். அவர் எங்களிடம் பெருமையாய் நடந்துகொள்ள மாட்டார். வெற்றிப்பொருள் வினியோகம் செய்யப்படும்போது அவர் எங்களைக்காட்டினும் அதிக உரியரெனக் கருதமாட்டார். மேலும் அவர் எங்களைப்

போன்ற ஒரு சாதாரண மனிதனென்னும் அந்தஸ்தை மட்டுமே கொண்டிருப்பார், என்பதே.

ஜனநாயக தத்வத்தின் உண்மையை விளக்கிக்காட்ட மஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளதைக்காட்டினும் தெளிவாயும், ஒழுங்காயும், நியாயமாயுமுள்ள வேறு வாக்கியங்களுண்டா? இவ்வாட்சியைக்காட்டினும் நியாயமான வேறு பொதுஜன ஆட்சியுண்டா? உயர்வு, தாழ்வு, என்னும் விகாரமான எண்ணம், கொள்கை, அநுஷ்டானம் ஆகியவைகளை யொழித்து சமத்துவத்தை நிலைநிறுத்தக்கூடிய இவ்வாட்சியைத் தவிர, உதாரணத்திற்காகவேனும் வேறு ஒரு ஸ்தாபனத்தைக் கட்ட வியலுமா? இஸ்லாமின் இப்பரிசுத்தமான சமத்துவத்தை, தங்களின் பேராசை, சுயநலம் ஆகியவைகளின் மூலமாய் அழித்துவிட்ட 'பனீ உமைய்யா' சந்ததியார்களை அல்லாஹுத ஆலா விசாரணை நடத்துவானாக. இஸ்லாமின் சமத்துவக் கொள்கையைச்சார்ந்த சக்தி, அபிவிருத்தி யடைந்துகொண்டிருந்த நல்ல சந்தர்ப்பத்தில் 'பனீஉமையா'வின் சந்ததியார் தங்களின் ஏதேச்சாதிகார முறையைக்கொண்டு அதை அடக்கி நாசமாக்கிவிட்டனர். 'அல்லாஹ்'! 'அல்லாஹ்'! வெறுங்கையாகவிருந்த சமூகத்தினர் இன்று பற்பல பாக்கியங்களைப் பெற்றிருக்கின்றனர். ஆனால் பெரும் பொக்கிஷத்தைக் கரத்தில் தாங்கியவர்களாய் உலகைச் சந்தித்த இன்று நாம் எல்லாவற்றையும் இழந்து வீணர்களாகத் திரிகின்றோம்.

அரசர், சுல்தான், முதலிய உயர்தரத்தாரின் நாமங்களுக்கு முன் அவர்களின் கௌரவத்தை முன்னிட்ட பற்பல ஆச்சர்யமான பதங்கள் இணைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அவர்கள் அவரவரின் உயர்வைக் குறிக்கத்தக்க பதங்களின்றி அவர்களின் நாமத்தை உச்சரிப்பது அவர்களை இழிவுபடுத்தக்கூடிய குற்றமெனக் கருதப்படுகின்றது. ஆனால் இஸ்லாமிய 'கிலாபத்' ஸ்திரப்பட்டிருந்த காலத்தில் கலீபாக்கள் இவ்வரசர்களைப் போன்ற கௌரவத்தைக் கோரியதாய் தெரியவில்லை. தாழ்ந்த நிலைமையிலுள்ள ஒரு முஸ்லிம் இஸ்லாமிய கலீபாக்களை யணுகி, 'ஓ அபூபக்கரே'! 'ஓ உமரே!' என்று கூவி யழைப்பதையும், அதற்குக்கலீபாக்கள் சந்தோஷமுற்று விடையளிப்பதையும், குறிப்பிடவேண்டி யிருக்கின்றது. 'கலீப'யெ ஸுஹுல்லாஹ்!' 'அமீருல் மூமினீன்!' என்னும் பதங்களை மட்டும் சேர்த்து முஸ்லிம்கள் கலீபாக்களை அழைப்பதுண்டு. இப்பதங்கள் கலீபாக்களின் உண்மை நிலையை விளக்கிக்காட்டக் கூடியவையே யன்றி அவர்களின் கௌரவத்தை யொட்டியவன்று. தலைவர், தனவந்தர் முதலியோருங் கூட இப்பதங்களை உச்சரித்து கலீபாக்களை அழைத்து வந்தனர்.

இத்தகைய நிலையிலேயே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம், அவர்களுமிருந்து வந்தார்கள். நாயகம் அவர்கள் தலைவர், பெரியார் என்னும் பதங்களைக் கொண்டு தங்களை யழைக்கும் சப்தத் திற்குச் செவி கொடுக்க இஷ்டப்படவில்லை, ஒரு சாதாரண "பதவி" நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகத்தை யடைந்து, 'யாமுஹம்மத்!' (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) என்று கூவி யழைப்பதுண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் 'பதவி' யொருவர், 'நாய கம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்' அவர்களின் சமுகத்தில் அச் சம் மேலிட்டவராய் முன் வந்தார். அவ்வமயம் 'பதவி'யை நோக்கி, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "நீர் எமக்கஞ்சு கிறீரா? நான் 'கத்தியா' என்னும் சாதாரண உணவையுண்டு வந்த ஒரு தாயின் புத்திரனுகும்" என்று அறிவித்தார்கள்; சுப்ஹானல் லாஹ்! சுப்ஹானல்லாஹ்!! சுப்ஹானல்லாஹ்!!!

ஒரு ஸஹாபீ தன் புத்திரரை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அவர்களின் சமுகத்திற்கனுப்பக் கருதியபொழுது, புத்தி ரர் தந்தையை நோக்கி, 'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வீட்டிற்குள் ளிருந்தார்களாயின் நான் எவ்வாறு அழைப் பது, என்று வினவியதும் அந்த ஸஹாபீ ஆச்சரியமுற்று தன் புத்தி ரரை நோக்கி, "என் அருமை புத்திரரே! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்அவர்களின் நபித்துவத்தையொட்டிய இல்லம், 'கெய் ஸர்' 'கிஸ்ரா' என்னும் அரசர்களின் தர்பார்களைப் போன்றதல்ல. மேலும் படாடோபம், அகம், மிதமிஞ்சிய பெருமை முதலிய ஆபா சங்களை விட்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்' அவர்க களின் பீடம் பரிசுத்தமானதாகும் 'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' அவர்கள் தங்களின் நண்பர்களைக் காட்டினும் தங்களை எச்சந்தர்ப்பத்திலும் உயர்வு படுத்திக்கொள்ளக் கருதுவதில்லை" என்று அறிவித்தார்கள்.

இஸ்லாமிய சரித்திரத்தைச்சார்ந்த அதிக உயர்வும் கீர்த்தியு முள்ள பீடம் முதற்கொண்டு அப்பீடத்தின் பிரதிநிதிகளான கலீபாக் கள் வரையுள்ள பெரியார்கள் கொண்டிருந்த அந்தஸ்தை இதோ கண் கூடாய்க் கண்டுகொண்ட நாம் இன்று அரசாட்சி, சமஸ்தானம் ஆகிய வைகளை விட்டு சில பூஸ்திதிகளையும், சில தங்கம், வெள்ளி நாணயங் களையும், ஆபரணங்களையும் கொண்டிருப்போரின் நிலையைக் கவனிப் போம். செல்வப் பெருக்குள்ளோருள் பெரும்பான்மையோர் ஐசுவரி யமே எல்லா பாக்கியங்களையும் அளிக்கக் கூடியதென்று தீர்மானித் திருக்கின்றனர். ஆனதுபற்றியே இவர்கள் அதிகாரப் பதவி, தலை

மைத்தனம் ஆகியவைகளுக்கு தாங்களே உரியவரெனக் கூறி அதற்காகப் போராடுகின்றனர். அதிகாரவர்க்கத்தினரை சந்தோஷப்படுத்தி, அரசாங்கத்தின் அடிமைகளாகப் பதிவு செய்துகொண்டு சம்பாதித்த பட்டம், அல்லது ஷைத்தானிய பேராசை ஏற்படுத்திய விருது முதலியவைகளைச் சேர்க்காமல் இவர்களின் நாமங்களை எவரேனு முச்சரித்துவிட்டால், கொடிய கோபங்கொள்ளும் 'பிர்ஔன்' களுக்கும் 'நம்ரூத்'களுக்கும் பஞ்சமில்லை. அச்சந்தர்ப்பத்தில் பட்டதாரிகள் கொள்ளும் கோபத்தை முன்னிட்டு இவர்களின் முகம் துஷ்ட மிருகங்களின் முகத்திற்கொப்பாகி விடுகின்றன. மேலும் இவர்கள் தங்கள் கோபத்தையடக்கிக்கொள்ள முடியாது மிதமிஞ்சி விடுகின்றனர்.

அல்லாஹுத ஆலாவின் ரஸூலாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் தங்களை குர்ஆன் ஷரீபுக்கும், சுன்னத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய சாதாரண மதினமா நகரவாசிகளென்றே தீர்மானித்திருந்தனர். "ஷரீஅத்தைக் கடைப்பிடித்து வழுவின்றி நடந்து வரும் வரையிலேயே நான் உங்கள் அமீராக (தலைவராக) விருக்கக்கூடும். நான் தவறிழைப்பேனுயின் நீங்கள் என்னைச் சீர்திருத்தி விடுங்கள்" என்று கலீபாக்கள் பகிரங்கமாய் அறிவித்திருக்கின்றனர். ஆனால் பிர்ஔனின், சந்ததிகளான இவ்விழிய அகம்படைத்தோரை நோக்கி "கர்வம் நிறைந்த உங்கள் செய்கை, அநியாமும், நம்ரூதின் சேஷ்டையுமல்லவா? என்றும், உங்களுக்கு இஸ்லாமின்மீது பிரீதியில்லாது போயின் முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாமையும் அகற்றி அதற்குப் பதிலாய் குப்ரை ஸ்தாபிக்கக் கருதுகின்றீர்களா? என்றும் கேட்க வேண்டுமல்லவா?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கலீபாக்களை அவர்களின் நாமத்தை மட்டும் சுட்டியழைத்தவர்களல்லவா முஸ்லிம்கள்? கலீபாக்களின் வார்த்தைகளுள் ஆக்ஷேபிக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தையையும் கூசாமல் ஆக்ஷேபித்தவர்களல்லவா முஸ்லிம்கள்? கலீபாக்களை கடுமையான முறையில் எச்சரித்தவர்களல்லவா முஸ்லிம்கள்? கலீபாக்கள் ஓதிய குத்பாக்களை ஓதவொட்டாமல் தடுத்துவிட்டவர்களல்லவா முஸ்லிம்கள்? தங்களை கௌரவிப்பதற்காக தங்களின் நண்பர்கள் எழுந்து நிற்கக்கூடாதென்று தடுத்து, அஜம் தேசத்தின் கிரீடாதிபதிகளை கௌரவிப்பதைப்போல் என்னைக் கௌரவிக்கவேண்டாம். இஸ்லாமிய ஏக தெய்வக் கொள்கை, இத்தகைய நடவடிக்கையை ஏற்காது" என்று அறிவித்த நாயகம் ஸல்லல்

லாஹூ அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்த[illegible] முஸ்லிம்க[illegible] இத்தகைய மகத்துவமுள்ள முஸ்லிம்களை இழிவுபடுத்தக்[illegible] எங்கிருந்து பிறந்தது.? முஸ்லிம்களை இழிவுபடுத்துவோர் தங்களின் முன்னோர்களான பிர்ஔன், நம்ரூத் முதலியவர்களிட மிருந்து அடைந்த பாத்யதை யாது? முஸ்லிம்களை இழிவுபடுத்த வஞ்சாதோர், ஐசுவரியப் பெருக்கின் மமதையைக் கொண்டிருக்கலாம். ஆனால் இவர்களிடை குடிகொண்டிருக்கும் மிதமிஞ்சிய அறியாமை, மடமை ஆகியவைகளின் அளவிற்கேற்ப ஐசுவரியமும் மிதமிஞ்சியதாக விருக்குமாவென்று யான் சந்தேகிக்கவேண்டியிருக்கின்றது. ஐசுவரியத்தை வணங்கும் அடிமைகளான இழிய புழுக்கள் தங்களைச் சூழ்ந்துகொண்டிருப்பதைக்கண்டு பெருமை கொள்ளும் பணக்காரர்களே! எதேச்சாதிகார அரசர்களைச் சூழ்ந்து கிடக்கும் அடிமைகளைக் காட்டினும் அதிக வடிமைகளா வுங்களிட மிருக்கின்றனர்? எவ்வாறுயினும் என் சப்தத்தைச் செவியுறும் ஒவ்வொரு நபரும் அப்பணக்காரர்களுக்கு அவர்களின் தோல்வியைச் சார்ந்த துக்கச்செய்தியை இன்றே அறிவித்துவிடட்டும். அப்பணக்காரர்களின் அழிவுக்குரிய காலம் இதோ நெருங்கிவருகிறது. பிர்ஔனும், பிர்ஔனைச் சார்ந்தோர்களும் மூழ்கியிறந்த வேடிக்கையை செங்கடல் கண்டு களித்திருக்கின்றது. ஆனால், இவ்வேடிக்கைமட்டு மின்றி இத்தகைய எண்ணிலடங்காத வேடிக்கைகளை உலகம் கண்டு களிக்காமலில்லை.

இந்தியாவின் சுயேச்சை, உண்மை, சத்தியம் ஆகிய சமுத்திரத்தின் அலைகள் பெயருக்குமட்டுமன்றி உண்மையாகவே சிவப்பு நிறமுள்ளதாக விருக்கும். பெருமையும் அகமும் கொண்டுள்ள தலைவர்கள் அச்சிவந்த அலைகளில் மூழ்கி நாசமுறுவதை வேடிக்கை பார்க்கும் காலம் இதோ வந்துகொண்டிருக்கின்றது.

"பிர்ஔனும், பிர்ஔனின் சைனியங்களும் பூமியில் புரிந்த எதேச்சாதிகாரம், அநியாயம் ஆகியவைகளின் மூலமாய் பெரும் அகத்தைக்கொண்டிருந்தனர். மரணமடைந்த பின்னர் நம்மிடை மீண்டும் வரவேண்டியதில்லை யென்று அவ்வறிவீனர்கள் கருதியிருந்தனர். பின்னர் நாம் பிர்ஔனையும் பிர்ஔனின் சைனியத்தையும், நம் மற்புதமான பலமுள்ள கரத்தால் பிடித்து சமுத்திரத்தின் அலைகளில் எறிந்துவிட்டோம். உண்மையை உல்லங்கனஞ் செய்வோரின் முடிவு எத்தகையதாக விருக்கிறது, என்பதை யுற்றுநோக்குங்கள். மானிடர்களின் தலைமைத்தனம், அதிகாரப்பதவி ஆகியவைகளை நாம் பிர்ஔனுக்கும் பிர்ஔனைச் சார்ந்தோர்க்கும் அளித்திருந்தோம். ஆனால் அவர்கள் ஜனங்களுக்கு நல்வழி காட்டுவதற்கு பதிலாக நர

கத்திற்கழைக்கும் தலைவராக விருந்தனர். ஆகவே அவர்களுக் காதரவு அளிக்க எவருமில்லாது பரிதபிக்கக் கூடிய உலகமுடிவு நாளன்று அவர்களுடைய தலைமைத்தனத்தின் உண்மை வெளுத்துப் போம்'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

(தொடரும்.)

கர்பலாவின் துக்கநிகழ்ச்சியும் ஓர் அரிய ஆராய்ச்சியும்.

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத்அவர்களெழுதியது)

ஹஜ்ரத் இமாம்ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கர்பலாவென்னும் திறந்த வெளியில் வெட்டுண்ட சம்பவமானது சதா இரத்தத்தால் வரையப்பட்டும், நீர்ச்சொறிந்த கண்களோடு வாசிக்கப்பட்டும் வருமென்பது திண்ணம். ஆனால் ஹிருதயத்தைப் பிளக்கத்தக்க இத்துக்க நிகழ்ச்சியுள் இஸ்லாமிய ஷரீஅத்தின் எண்ணிறந்த அறிவுகள் அடங்கியிருந்தும் அவைகளைப் பற்பல இரத்தப்போர்வைகள் மறைத்துவிட்டன. மேலும் அவ்விசனகரமான சம்பவத்தில் ஆயிரக்கணக்காய் மறைந்திருந்த, ''உஸ்வயெஹஸனு'' வென்னும் முன்மாதிரியான காரியங்களை அந்தோ! இரத்த வெள்ளமடித்துக் கொண்டுபோயிற்று!

ஆகவே கர்பலாவின் விசனகரமான சம்பவத்தை யொட்டி துக்கங் காப்பதற்காக பூர்வகாலந்தொட்டு நடைபெற்றுவரும் நடவடிக்கையில் இன்று இன்னுமொரு துக்கச்செய்தியை இணைக்கவேண்டியதாகவிருக்கிறது. வெடித்துப்போன ஹிருதயம் பொங்குவதை முன்னிட்டு, கண்களிலிருந்து வடியும் இரத்தக் கண்ணீரைச் சிறிது நேரம் நிறுத்திவைத்து, கர்பலாவின் 'ஷஹாதத்' தென்னும் துக்கசம்பவத்தை இஸ்லாமிய இரகசியத்தின் ஊற்றுக்கண்களாக்கவேண்டும். இவ்வரிய சேவையைப்புரிய வாரம்பிப்போமாயின், ஹஜ்ரத் இமாம்ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஷஹாதத்தையொட்டி துக்கங்காப்பதுள் இது விசேஷ நற்பயனை யளிக்கக்கூடிய மார்க்கமாக விருக்கலாம். மேலும் ஷரீஅத்தானது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் உம்மத்தோர், இம்முறையைப் பின்பற்றியே, துக்கங்காக்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

பெரியாரை விசுவசிப்பது என்னும் கொள்கை உலகில் ஒவ்வொரு சமூகத்தாருள்ளும் இயற்கையாகவே குடிகொண்டிருக்கிறது. ஆனது

பற்றியே எல்லா சமூகங்களும் தத்தம் பெரியார்களை யொட்டி துக்கங் காப்பதற்குப் பற்பல முறைகளைக் கைக்கொண்டிருக்கின்றன. மேலும், பின் சந்ததிகள் அறிவையும், உணர்ச்சியையும் பெறக்கருதி பெரியார்களின் நற்செய்கைகள் சதா உயிர்ப்பித்திருக்கவேண்டுமென உலகோர் முயலுகின்றனர். மேலும், பெரியாரின் விசுவாசத்தை முன்னிட்டு நடைபெறும் காரியங்களுள் விக்கிரகாராதனையே அதிசிரேஷ்டமான காரியமாகவாயிற்று. விக்கிரகாராதனையை ஸ்திரப்படுத்திய சங்கிலியின் முதல் வளையமும் பெரியாரை விசுவாசிக்கவேண்டுமென்னும் நல்லெண்ணத்தையே அடிப்படையாய்க் கொண்டிருக்கின்றது.

பெரியாரை விசுவசிப்பதற்காக உருவச்சிலையை நாட்டி, அவர்களின் ஞாபகார்த்தத்தை நிலைநிறுத்தக்கருதி, அவர்களைப் பின்பற்றும்படி அறிவுறுத்துவதற்காக நடைபெறும் காரியங்களையே இங்கு குறிப்பிடுகிறோம்.

சமூகப் பெரியாரை விசுவசிப்பதற்கான மார்க்கங்களுள் இது மிகப் பழமையானதாகும். மேலும், ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலம்வரை இத்தகைய உருவச்சிலைகள், பல ஸ்தாபிக்கப்பட்டிருந்ததோடு, பகிரங்கமாய் அவைகள் வணங்கப்பட்டும் வந்தன. ஆனால், கிரேக்கரும், எகிப்தியரும், தத்தம் நாகரீகம் முன்னேற்றம் ஆகியவைகளைச் சார்ந்த வர்ணத்தின் மூலமாய் அவ்வுருவச்சிலைகளை பெருமையும் கீர்த்தியுமுள்ளனவாக வமைத்தனர். இன்றைய ஐரோப்பிய நாகரீகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் அடிகோலிய பெரியார்களின் உருவச் சிலைகளுள்ளும், கிரேக்கரின் பூர்வநாகரீகம் தெளிவாய் ஜ்வலிக்கின்றது. ஆனால் ஹிந்துக்களின் மதத்தைச்சார்ந்த விக்கிரக வரிசையிலும் கிரேக்கரின் நாகரீகத்தை யொட்டிய சிரேஷ்டம் தெளிவாய்த் தோன்றுகிறது.

இஸ்லாம் ஒரு பரிசுத்தமான மதமாகும். இம்மதம் களங்கமற்ற ஏகதெய்வக்கொள்கையை நிலை நிறுத்தக்கருதுகிறது. மேலும், அல்லாஹ் அல்லாதவைகளினுடையவும், மானிடர்களினுடையவும் பெருமைக்குரிய எல்லாவழிகளையும் அடைத்து ஏகதெய்வீகப்பெருமையின் லக்ஷியத்தையடையக்கூடிய, அல்லது சமீபிக்கத்தக்க காரியத்தை ஸ்திரப்படுத்த இஸ்லாம் கங்கணங்கட்டியது. ஆகவே, மானிடர்கள் பன்முறை விழுந்து உதை வாங்கியிருக்கும் படுகுழியிலேயே மீண்டும் வீழ்ந்து நற்காரியத்தை நிலைநிறுத்த இஸ்லாம் சம்மதிக்க முடியாது.

இஸ்லாம் தோன்றியவன்றே, உலகின், எல்லா நடவடிக்கைகளையும் உற்றுநோக்கி, ஒவ்வொரு செய்கையினுடையவும், ஆத்மா, உண்மை, ஜீவன் ஆகியவைகளை எடுத்துக்கொண்டு ஞானமும், இணக்

கமுமற்ற வெறும் உடையையும், தேகத்தையும் ஒதுக்கித் தள்ளி விட்டது.

உண்மையை மறைத்துக்கொண்டிருந்த அஞ்ஞானத்தின் கொடியதிரைகள் இஸ்லாம் தோன்றியதும், துண்டுத்துண்டாய்க் கிழிந்து போயின. அறியாமை வழிகேடு ஆகிய கற்களால் மறைக்கப்பட்டிருந்த அரியமுத்துக்களை இஸ்லாம் தேடியெடுத்து உலகோருக்குச் சமர்ப்பித்தது. முறைதவறிய நாகரீகப் போர்வைகளால் மூடப்பட்டிருந்த இரகசியங்களை இஸ்லாம் வெளியாக்கிற்று. சூரியனைப்போல் திறையின்றி பகிரங்கமாய் ஒவ்வொரு மனிதனுக்கும் இஸ்லாமிய உண்மை புலப்படவாரம்பித்தது. மேலும் இவைகள் இஸ்லாமின் அற்புதமும், சிறப்புற்றமாறுதலுமாகும். இம்மாறுதலையொட்டி குர்ஆனை ஹகீம் விளக்கிக் காட்டியிருப்பதாவது:—

"அல்லாஹு தஆலா முஸ்லிம்களின் நண்பனும் கூட்டுறவுக்காரனுமாகும். (ஆதலின்) முஸ்லிம்களை சகலவித மானிட இருளைவிட்டு அப்புறப்படுத்தி இயற்கையான தெய்வீகப் பிரகாசத்தையடையச் செய்கின்றான். ஆனால் காபர்களின் நண்பர்கள், அவர்களின் விக்கிரகங்களாகும். இவ்விக்கிரகங்கள் காபர்களை அல்லாஹு தஆலாவால் அளிக்கப்பெற்றிருக்கும் பிரகாசத்தை விட்டகற்றி அறியாமை வழிகேடு ஆகிய இருளில் சேர்த்து விடுகின்றன." (அல்குர் ஆனின் வியாக்கியானம்)

இது ஒரு பெரும் மகத்தான மாறுதலாகும். இம்மாறுதலைச் சார்ந்த பிரகாசம் இஸ்லாமின் எல்லா நற்போதனைகளிலும் ஜ்வலிக்கின்றது.

ஆகவே பெரியாரின் விசுவாசத்தை முன்னிட்டு துக்கங்காக்கப்படும் முறையும் இஸ்லாமிய பிரகாசத்தைவிட்டு ஒதுங்கிநிற்க முடியாது. முன்னோர்களின் ஞாபகார்த்தத்தை நிலைநிறுத்துவதை முன்னிட்டு, முன்னோர்களின் நற்செய்கை, நற்குணம், செல்வாக்கு, ஆகியவைகளைப் பாதுகாப்பதற்காக பூர்வகாலந்தொட்டு நடைபெற்றுவரும் முறையிலும் இஸ்லாம் ஓர் ஆத்மார்த்திக மாறுதலை யுண்டுபண்ணிற்று. உருவச்சிலைகளின் மூலமாய் முன்னோர்களை கௌரவிக்கவோ! விசுவசிக்கவோ! இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஏனெனின்? இத்தகைய நடவடிக்கையானது, விக்கிரகாரதனைவரை மானிடர்களைக்கொண்டு போய்த்தள்ளக்கூடிய, இழியகாரியமாகவிருக்கின்றது. மேலும், அரிய ஜீவனைக்கொண்டுள்ள மானிடச்சிறப்புகளுக்கு தலைவணங்க இஷ்டப்படாததைப் போலவே முன்னோர், பெரியார், உத்தமர், ஆகிய நல்லோரின், முன் மாதிரியானவைகளைச் சார்ந்த மகத்துவம் அழிந்து

போகவும் இஸ்லாம் சம்மதிக்கவில்லை. ஆதலின் ஒவ்வொருநாளும் ஐந்துதடவை அல்லாஹு தஆலாவின் சமுகத்தையடையும்போழ்து 'ஸிராத்தெமுஸ்தகீம்' என்னும் செவ்வையான நல்லவழிச்செல்வ தற்கு அருள்புரியும்படி அல்லாஹு த ஆலாவைக் கேட்குமாறு இஸ் லாம் கற்பிக்கின்றது. மேலும், அன்பியாக்கள், சித்தீகீன்கள், ஷுஹ தாக்கன், ஸாலிஹீன்கள் ஆகிய உத்தமர்களின் அறிவும், செய்கை யுமே "ஸிராத்தெமுஸ்தகீம்" என்றும் இஸ்லாம் விளக்கிக் காட்டி யிருக்கின்றது. ஆகவே இந்நல்லோரின் முன்மாதிரியான காரியங்கள் ஒவ்வொரு நிமிஷத்திலும் நம்முன் நிற்கவேண்டும் (இது அதிமுக்கிய மான விஷயமாதலின் "ஸூரயெபாத்திஹா"வின் தப்ஸீரில் விரி வாய் வறையப்படும்).

அஞ்ஞானத்தின் இருளடர்ந்த திரைகள் விசனங்காக்கப்படும் சடங்கைச் சார்ந்த உண்மையையும் மறைத்துவிட்டன. நாகரீகம் முன்னேற்றம் ஆகியவைகள் அத்திரைகளுக்கு மனதைக் கவரத்தக்க வர்ணங்களைப் பூசி அறிவையும் மழுங்கச் செய்துவிட்டன. ஆனால், இஸ்லாம் அத்திரைகளைக் கிழித்துத் தோலைப்போக்கி உண்மை என் னும் பருப்பை பகிரங்கப்படுத்திவிட்டது. சென்றுபோன நபிமார்க ளின் செய்திகளை குர்ஆன்ஷரீபில் விவரிக்கப்பட்டிருக்கின்றனவல் லவா? அவைகளுள் உண்மையாகவே மானிடர்களுக்கு வேண்டிய அறிவும், உணர்ச்சியும் அடங்கியிருக்கின்றன. ஆனால் அத்தகைய உத்தமரின் உருவச்சிலையை அமைப்பதால் ஜனங்கள் நன்மை யெய்து வதற்குப் பதிலாக ஏமாற்றமடைந்து விடுகின்றனர். மகத்துவமுள்ள பூர்வ பெரியார்களின் ஞாபகார்த்தத்தை யொட்டிய உண்மையான லக்ஷியத்தை, 'உஸ்வயெஹஸனு' வென்னும் விரிவான பொருளைக் கொண்டுள்ள பதத்தின் மூலமாய் 'குர்ஆன்ஷரீப்' அறிவுறுத்துகின் றது. மேலும் 'உஸ்வயெஹஸனு' வென்னும் முன்மாதிரியான காரி யங்களை யுற்று நோக்கி அவைகளைப் பின்பற்றும்படி முஸ்லிம்களை இஸ்லாம் அடிக்கடி எச்சரிக்கின்றது. மேலும் ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸல்லாம் அவர்களின் வாழ்நாளைச் சார்ந்த முன்மாதிரி யான காரியங்களை முஸ்லிம்களின் 'கஃபா' என்றும், 'கிப்லா' என் றும், இஸ்லாம் தீர்மானித்திருக்கின்றது.

"ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸல்லாம் அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கையிலும், அவர்களைச் சார்ந்தோரின் ஜீவியத்திலும் நீங்கள் பின்பற்றுவதற்குரிய முன் மாதிரியான நற்காரியங்கள் அடங்கியிருக்கின்றன." (அல்குர்ஆனின் வியாக்கி யானம்).

பெரியாரை விசுவசித்து அவர்களின் ஞாபகார்த்தத்தைச் சார்ந்த காரியங்களுள் உண்மையான நன்முறையை உலகில் முதன்முதலாகக் கற்பித்தது இஸ்லாம் மதமேயாகும். ஆதலின் இவ்வரிய ஒழுங்கு முறையின்படி ஹஜ்ரத் இமாம்ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 'ஷஹாதத்து' என்னும் சம்பவமானது, உறுதி; அஞ்சாமை, பொறுமை ஆகியவைகளை ஸ்திரப்படுத்தி, ஏதேச்சாதிகாரத்தை யொழித்து, ஜனநாயகத்தை ஸ்தாபித்து, நல்லதை யேவிக் கேடுதியை யகற்றும் தன்மையை எச்சந்தர்ப்பத்திலும் ஞாபகமூட்டத்தக்கதாக விருக்கவேண்டும். அல்லது வருடமோரு முறையேனும் மதசம்பந்தமான இத்தியாகத்தின் ஜீவன் எல்லாச் சமூகத்தினிடையேயும் பரவுவது அவசியமாகும்.

ஹஜ்ரத் இமாம்ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிடத்துள் இன்னமொரு மகத்தான விஷயமடங்கி யிருக்கின்றது. இது மதசம்பந்தமான ஆரம்பத்தொடர்பு முதற்கொண்டு நாளடைவில் வியாபகமடைந்து இஸ்லாமிய பரிபூர்ணத்தை யடைகின்றது.

அதி ஆச்சரியமான ஆதரவற்ற நிலையிலேயே உலகில் மதசம்பந்தமான சரித்திரம் ஆரம்பமாயிற்று. உலகில் நடைபெற்ற கொடுமையினும் கொடுமையான யுத்த சரித்திரங்களையும் வாசித்திருக்கின்றோம். தந்தை புத்திரனுக்குதவியாயும், சகோதரன் சகோதரனுக்காதரவாயும், மனைவி கணவனுக்குச் சார்பாயுமிருந்து கஷ்ட நிஷ்டூரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனல் மதத்தைச் சார்ந்த, ஆத்மார்த்தீகவுலகில் மகன் தந்தையையும், சகோதரன் சகோதரனையும், மனைவி கணவனையும் விட்டகன்று அவர்களுக்குத் தொந்தரையை யதிகப்படுத்தியிருக்கின்றனர். ஆனதுபற்றியே, அநேகமாய் நபித்துவத்தைச் சார்ந்த குடும்பம் உறவினரின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை.

ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏகதெய்வக்கொள்கையை யேற்றுக்கொள்ளும்படி வெகுகாலம் வரை இரவு பகலாய் தங்களின் சமூகத்தினருக் குபதேசித்தார்கள். நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகத்தினர் வஞ்சகம், கோபம், ஆகியவைகளுக்கிரையாகி நபியவர்களின் அழைப்பிற்கிணங்க மறுத்துவிட்டனர். மேலும், இச்சமூகத்தினர் நபியவர்களைவிட்டு வேறுபட்டுவிட்டதோடு செவிகளை விரல் கொண்டு அடைத்துக்கொண்டனர்.

"ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (அல்லாஹுதஆலாவின் சமூகத்தில்) முறையிட்டுக்கொண்டார்கள் :—என் இரக்ஷகனே ! இரவு பகலாய் என் சமூகத்தினரை நல்வழியிலழைத்தேன். ஆனல், இவ்வழைப்பின் மூலமாய் அவர்கள் என்னைவிட்டு வெறுண்

டோடுவதே அதிகமாயிற்று. உன் சமுகத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி அவர்களைக் கூவி யழைத்தபோது அவர்கள் செவிகளை விரல் கொண்டு அடைத்துக்கொண்டனர். உன் சப்தம் அவர்களைச் சேராதிருக்கும்பொருட்டு அன்னோர் தங்களை வஸ்திரங்களால் சுற்றிக் கொண்டனர். அந்தோ !! உண்மையை அறியாத இச்சமூகத்தினர், சதா பிடிவாதம், அசத்தியம் ஆகியவைகளைச் சார்ந்த அகம் பாவத்தையே வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

இந்நபித்துவத்தின் சப்தம், நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகத்தினரால் மறுக்கப்பட்டதுமட்டுமின்றி நபியவர்களின் குடும்பத்தைச் சார்ந்த சுவர்களிலும் மோதுண்டு வெறுமையாய்த் திரும்பிற்று. மேலும், நபித்துவத்தைச் சார்ந்த தீபமென்றழைக்கத்தக்க நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வருங்கூட நபித்துவத்தின் பிரகாசத்தை யேற்றுக்கொள்ளவில்லை. கடைசியாய் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் புதல்வரை அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் அடைக்கலம் புகவழைத்தார்கள். ஆனால், நெருக்கடியான சமயத்திலும் நபியவர்களின் உபதேசத்தை அவர்களின் புதல்வர் செவியுறவில்லை. ஆனதுபற்றியே, நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வரும், மற்றவரோடவே, தெய்வீக சிக்ஷையை முன்னிட்ட பெரும் வெள்ளப் பிரளயத்தில் சிக்குண்டார்.

நூஹ் அலைஹிஸ்ஸல்லம் அவர்கள் தங்கள் மகனை நோக்கி மகனே ! எங்களோடு கப்பலில் ஏறிக்கொள். காபர்களிடத்தில் சம்பந்தப்படாதே, என்றறிவித்தபோழ்து "மலையின் உச்சியிலேறிக்கொள்ளுவேன். மலை என்னைக் காப்பாற்றும்" என்று புதல்வர் கூறியதால் (மீண்டும் புதல்வரை நோக்கி) நூஹ் அலைஹிஸ்ஸல்லாமவர்கள், "நீ எவ்வழி கேட்டின் அறியாமையில் சிக்குண்டாய்? அல்லாஹுதஆலாவின் தண்டனையை விட்டு இன்று எவரும் காபர்களைக் காப்பாற்றமுடியாது" என்று அறிவித்தார்கள். ஆனால், நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அரிய உபதேசங்கள் எத்தகைய பயனையுமளிக்கவில்லை. கடைசியாய், நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் அவர்களின் புத்திரருக்குமிடையில் வெள்ளப்பிரளயத்தின் அலைகள் குறுக்கிட்டுவிட்டன. ஆகவே நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வரும் மற்றவர்களோடு சேர்ந்து அவ்வெள்ளத்தில் மூழ்கும்படியாயிற்று." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

ஹஜ்ரத்லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த எல்லோரும் அவர்களுக்கு பக்கபலமாக விருந்தார்கள். ஆனால்

நபியவர்களின் மனைவியார் லூத் அலைஹிஸ்ஸல்லாம் அவர்களைவிட்டுப் பிரிந்து நபியவர்களின் எதிரிகளோடு தெய்வீகத் தண்டனைக்குட்படநேர்ந்தது.

அமரர்கள் கூறியதாவது:—"நாங்கள் இத் துர்க்கிருத்தியக்கார சமூகத்தின் அடாத செய்கைக்குரிய பயனை யெடுத்துக்காட்டும் பொருட்டு அனுப்பப்பட்டிருக்கின்றோம். நாங்கள் இச்சமூகத்தினருக்குப் புரியும் ஹிம்சையை விட்டு லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தார் மட்டும் காக்கப்படுவர். லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தாருள் லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மனைவி மற்ற கொடியவர்களோடு தெய்வீகத் தண்டனைக்குட்படுத்தப்படுவாள். ஏனெனின்? அவளும் காபராக விருக்கின்றாள்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வர் தந்தையை விட்டுப் பிரிந்திருந்தார். ஹஜ்ரத் லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மனைவி லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களைவிட்டு ஒதுங்கியிருந்தாள். ஆனால், நபித்துவத்தின் குடும்பத்தைச் சார்ந்த இத்தகைய நிலை ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலத்தில் மாறிற்று. அஃதாவது :—புதல்வர் தந்தைக்கும், மனைவி கணவனுக்கும், சகோதரர் சகோதரருக்கும் கட்டுப்பட்டு அவர்களின் அழைப்பிற்கு விசேஷ கௌரவத்தை யளித்தார்கள். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலம்முதற்கொண்டு நபிமார்கள் புரியும் சத்தியப் பிரசாரத்தை முன்னிட்டு அவர்களுக்கேற்படும் கஷ்ட நிஷ்டூரங்களில், நபிமார்களின் புதல்வர், மனைவி, சகோதரர், ஆகியவர்கள் போதிய அளவு சம்மந்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஹஜ்ரத் ஹாஜிரா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்தான், முதன் முதலாக இவ்வாத்மார்த்தீக ஜிஹாத்தைப்புரிய முற்பட்டார்கள். ஹாஜிரா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தங்களின் கணவராகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கட்டளைக்குட்பட்டு ஈரல் துண்டுக்குச் சமதையான தங்கள் பாலகனை ஜலத்தின் வாடை கூட இல்லாத ஒரு பாலைவனத்தில் போட்டுவிட்டார்களல்லவா? அல்லாஹுத ஆலா ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையுட்படுத்தக் கருதியிருந்த அதி கடுமையான சோதனைக்கு இது பூர்வ பீடிகையல்லவா? மேலும், ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் கடைசி சோதனைக்குரிய காலத்தில் தந்தையின் கட்டளையை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொடார்களல்லவா?

"ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களோடு ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நடக்கத் திரியத் தகுதி ஏற்பட்டபோழ்து ஒரு நாள் "மகனே! அல்லாஹுத ஆலாவின் வழி பாட்டில் நான் தங்களை யறுப்பதுபோல் கனவு கண்டேன். இச்சம் பவத்தை முன்னிட்டு நான் எதையும் பகரக்கூடவில்லை. இதை யொட்டி நாம் செய்யவேண்டியதென்ன? தாங்களும் கவனிக்கவேண் டும்" என்று ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் கூறினார் கள்: உடனே தவக்கமின்றி புதல்வர் (ஹஜ்ரத் இஸ்மாயீல் அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் "என் தந்தையே! இது அல்லாஹுத ஆலா வின் சமுகத்திலிருந்து செய்யப்படும் ஒரு சமிக்கை என்றே இக்கன வின் மூலமாய் அறியக்கிடக்கின்றது. ஆகவே தாங்கள் அல்லாஹுத ஆலாவின் கட்டளையை நிறைவேற்றுங்கள். அல்லாஹுத ஆலா நாடு வானாயின் நான் பொறுமையும் உறுதியுமுள்ளவர்களைச் சார்ந்தவனா கப் பெறுவீர்கள்" என்றறிவித்தார்கள். தந்தை, புதல்வர் ஆகிய இரு வரும் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் தலைவணங்கிவிட்டார்கள். மேலும் தந்தை, புதல்வரை யறுப்பதற்காக பூமியில் கிடத்திய போழ்து நாம் சப்தமிட்டுக் கூறியதாவது:—"இப்ராஹீமே! (அலை ஹிஸ்ஸலாம்) நிறுத்துங்கள். உங்கள் கனவை உண்மையானதாகக் காட்டிவிட்டீர்கள். நாம் நல்லோர்க்கு இவ்வாறே கூலி கொடுக்கின் றோம். உண்மையில் தாங்கள் பூர்த்தி செய்வதற்குத் தயாராகிவிட்ட இக்காரியம் மிகப் பெரியதொரு தியாகமாகும்," என்பதே. (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த எல்லோரும் ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பக்கபலமாகவிருந்து சகலவித ஆதரவுகளையும் புரிந்தார்கள். "தூர்" என்னும் மலையின் பிரகாசத்தைச் சார்ந்த நாவானது, மூஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபித்துவத்தின் நற்செய்தியை சமர்ப் பித்தபோழ்து, ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களோடு அவர் களின் மனைவியுமிருந்தார்கள்.

"மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் மத்யனிலிருந்து தங்களின் மனைவியை யழைத்து சென்றபோழ்து, மூஸா அலைஹிஸ்ஸலாமவர்க ளுக்கு தூர் மலைச் சிகரத்தில் தீச்சுடர் தோன்றிற்று.(ஆகவே),மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் மனைவியைப் பார்த்து, "நீங்கள் இங்கிருங்கள். நானொரு தீச்சுடரைக் கண்டேன். தாங்கள் குளிர் காய்வதற்காக அத்தீயிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து தீ சம்பாதிக் கின்றேன் என்று கூறினார்கள்." (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

ஆனால், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தோன்றிய தீச்சுடர் உண்மையில் தீச்சுடர் அல்லவென்பது, ஐமன் என்னும் ஓடைக்குச் சென்றபின்னர் நபி அவர்களுக்கு விளங்கிற்று. மேலும் தீச்சுடரைப்போல் தோன்றிய மின்னலானது பிர் ஔனின் அநியாயம், ஏதேச்சாதிகாரம் ஆகிய கிரகத்தில் விழுந்து நடுங்கச் செய்யக்கூடியதென்றும் தெரிந்தது. பிர் ஔனின் ஏதேச்சாதிகாரத்தை யொழிப்பதற்கான கருவியை 'அஸா' வெண்மையான கரம், ஆகிய வடிவத்தில் அல்லாஹுதஆலா மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்களித்தான். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் சகோதரரின் ஆதரவைக் கோரியபோழ்து அக்கோரிக்கையையும் அல்லாஹுதஆலா நிறைவேற்றி வைத்தான்.

"உங்கள் கரம், புஜம், ஆகியவைகளை யுங்கள் சகோதரரின் ஆதரவைக்கொண்டு பலப்படுத்தி நீங்களிருவரும் பிர்ஔனை மிகைத்துக் கொள்ளும்படிச் செய்வோம், என்று அல்லாஹுதஆலா கூறினான்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

ஆரம்ப முதற்கொண்டு முடிவுவரை சதா ஹாரூன்அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பக்கபலமாக விருந்து அவர்களின் எல்லாக் காரியங்களையும் பொறுப்பேற்றுச் செவ்வையாய் நடத்திவந்தார்கள்.

ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பிறகு நபித்துவத்தின் நிலை இன்னமும் முன்னேற்றமடைய வாரம்பித்தது. அல்லாஹுதஆலாவின் ஒரு நல்லடியார் தன் புதல்வரை அல்லாஹுதஆலாவின் சம்மதத்திற்கிணங்க தியாகம் செய்யக்கருதினார்கள். ஆனால், ஹஜ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தாங்களே குர்பானியின் பரிசுத்தமான பானகத்தைக் கோரித் தங்களின் கரத்தை நீட்டக்கூடிய காலம் தோன்றிற்று. ஆகவே ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கென்று தயாரிக்கப்பட்ட தூக்கு மரத்தை நோக்கி அதிவேகமாய் முற்பட்டார்கள்.

"ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அவர்களின் எதிரிகள் வெட்டவுமில்லை; தூக்கிலிடவுமில்லை. (ஆகவே), இத்தியாகத்தின் உண்மையைப் பொருத்தவரை சந்தேகமேற்பட்டு விட்டது." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

இஸ்லாம் பிரகாசிப்பதற்குமுன் அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் புரியப்பட்டிருக்கும் தியாகங்கள் பிரத்தியேகமானவையாயும், தனித்தனி நபர்களின் காரியமாயும் மிருந்தனவென்பது வெளிப்படை. நபிமார்கள் அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் தங்கள்

புதல்வரை அல்லது தங்களேயே தியாகம் செய்திருக்கின்றனர். ஆதலின் அவ்வரிய காரியங்களை ஜிஹாத்தின் பீடிகையென வழைக்கலாம். ஆனால் அந்த ஜிஹாத், பூரண பெரும் அந்தஸ்தை யடைவது இஸ்லாமைப் பொருத்திருக்கின்றது. பூர்வ மதங்களின், கொள்கை, வணக்கம், பழக்க வழக்கம், முதலியவைகளின் குறையை இஸ்லாம் பூர்த்தி செய்ததைப் போலவே இஸ்லாம் ஜிஹாத்தின் உண்மையை விளக்கிக் காட்டி அதைப் பூர்த்தியும் செய்தது. இஸ்லாம் தோன்றும் வரை நபிமார்களின் எக்குடும்பமேனும் ஜிஹாத்தில் ஈடுபட்டதுண்டா? மேலும் நபிமார்களின் குடும்பத்தைச் சார்ந்தோருள் சிற்சில தனி நபர்கள் புரிந்துள்ள தியாகங்களும் முற்றுப்பெருமல் தடைபட்டுப் போயின வல்லவா? ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஈரல் துண்டுபோன்ற புதல்வரை அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் குர்பானி செய்யமுற்பட்டுங்கூட அதற்கேற்ப சந்தர்ப்பமேற்படாமல் போயிற்று. ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூக்கு மரத்தை யடைந்தார்கள். ஆனால் உடனே பாதுகாக்கப்பட்டுவிட்டார்கள்.

சகோதரர், புதல்வர், மனைவி, ஆகியவர்கள் மட்டுமின்றி நபிமார்களின் எக்குடும்பமேனும் இன்றுவரை ஒற்றுமையாக குடும்பத்தின் எல்லா நபர்களும் நபித்துவத்தின் லக்ஷியத்தை யடைவதற்கான மார்க்கத்தில் ஈடுபட்டதாய்க் காட்டமுடியுமா?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குடும்பத்தைத் தவிர மற்ற நபிமார்களின் குடும்பத்துள் ஒன்றேனும் தன் குடும்பத்தைச் சார்ந்த பெரும்பான்மையோர் அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் குர்பானீயாகி விட்டதாய்ப் பகரவியலுமா?

எஜீத்தின் எதேச்சாதிகார கிலாபத்திற்குட்பட்டு 'பைஅத்' என்னும் விசுவாசப் பிரமாணம் செய்வதற்காக முற்பட்டவைகளே இஸ்லாமிய ஜனநாயக தத்வத்தை யழிக்கக் கருதின, என்று கூறுவது குற்றமா? மேலும் கெடுதியை யகற்றுவதற்காக நடைபெறும் தியாகங்களே மதத்தைச் சார்ந்த தியாகங்களாகும்.

ஆகவே, இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் 'உஸ்வயெ ஹஸனு' வென்னும் முன்மாதிரியான காரியத்திற்குப் புத்து யிரளிக்க வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டபோழ்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் குடும்பத்தைச் சார்ந்த ஆண், பெண், பாலர், முதலிய ஒவ்வொரு நபரும் அவ்வரிய சேவையில் ஈடுபட்டுவிட்டார்கள். மேலும், எத்தகைய குர்பானியின் பரிசுத்தமான இரத்

தத்தை பூமி பெறுதிருந்ததோ? அதே இரத்தத்தால் கர்பலாவின் பூமி செந்நிறத்தைக்கொண்டது.

ஹஜ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கர்பலா வென்னும் திறந்த வெளியில் புரிந்தகாரியம் இஸ்லாமின் சரிதத்தைச் சார்ந்ததாக மட்டுமின்றி இஸ்லாமின் உண்மையைச் சார்ந்ததாக விருக்கின்றது. மேலும் ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பீடத்திலிருந்து தோன்றி நாளடைவில் அபிவிருத்தி யடைந்து கடைசியாய் ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பீடத்துள் மறைந்துவிட்ட உண்மையானது ஹஜ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தியாகப் பெருமையால் வெளி யாகிப் பூர்த்தியுமாயிற்று.

உலகத்தை செழிக்கச் செய்வதற்காக ஸதா, நபித்துவத்தின் குடும்பம் பாழாகி வந்ததென்று கூறலாம். ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம்அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்தார்கள். ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வீடு வாசலை யிழந்தார்கள். ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆதரவின்றி சுற்றித்திரிந்தார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நபித்துவத் தைப் பின்பற்றியவர்களுள் ஹஜ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கர்பலாவென்னும் திரந்த வெளியில் தங்களின் குடும்பத்தை யழித்து பூர்வ நபித்துவத்தைச் சார்ந்த குடும்பத்தின் அரிய காரியத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குடும்பம் ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்ததாகும். மேலும் ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பாலகனாகவிருந்த காலத்தில் ஹிஜாஸில் மல்லாந்து கிடந்த வர்களாய் தாகவிடாய் மேற்கொண்டு குதிகாலை தேய்த்திருக்கின்றார் கள். ஆகவே ஹஜ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்க ளும் கர்பலாவெனும் திறந்த வெளியில் தாகவிடாய்கொண்டு ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களின் செய்கைக்குப் புத்துயிரளித் தார்கள். அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மத்.

ஹஜ்ரத் 'புஷைல்' ரலியல்லாஹு அன்ஹு

ஹஜ்ரத் புஷைலிப்னு இயாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் வாலிப காலத்தில் ஒரு பிரபல கொள்ளைக் கூட்டத்தின் தலைவராக இருந்து வந்தார்கள். ஹஜ்ரத் அவர்களைத் தலைவராய்க் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தின் நடவடிக்கை காரணமாக 'மூர்த்'திலிருந்து 'பாதர்' போகும் பாட்டை மிக்க அபாயகரமாக இருந்து வந்தது. ஹஜ்ரத் புஷைல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இயற்கையாகவே நற்சுபாவமுள்ளவர்களாக விருந்ததோடு உண்மையான வீரம் சொரிந்தவர்களாகவு மிருந்தார்கள். மேலும் ஹஜ்ரத் அவர்கள் எக்காலத்திலும் பேடித்தனமான காரியத்தைச் செய்ததே இல்லை. ஸ்திரீகளின் பிரயாணக் கூட்டங்களையும் அவர்கள் தாக்குவதில்லை. பிரயாணக் கூட்டங்களின் செல்வ நிலைமையை அறிந்து அக்கூட்டத்திற்கு பெருத்த அபாயம் விளையாத முறையில் கொள்ளை யடித்து வந்ததும் குறிப்பிடத்தக்கதே. சொற்பப் பொருளுடையவர்களைக் கொள்ளையிடுவது கிடையாது. இவ்வாறே ஹஜ்ரத் அவர்கள் தம் வாழ் நாளைக் கழித்து வந்தார்கள்.

இத்தகைய காலத்தில் ஒரு வியாபாரி தனிமையாய் 'மூர்த்'திலிருந்து பாதர் செல்ல நேர்ந்தது. அவ்வியாபாரி கொள்ளைக் கூட்டத்திற்கஞ்சி ஒருவரை தமக்குத் துணைவராக அழைத்துச் சென்றார். அத்துணைவர், அழகாயும், திறமையாயும் குர்ஆன் ஷரீபை ஓதக்கூடிய காரியாக விருந்தார். ஆதலின் அவர் இரவும் பகலும் குர்ஆன் ஷரீபை வழியில் ஓதிக்கொண்டே சென்றார். ஹஜ்ரத் புஷைலிப்னு இயாஸ் அவர்கள் பிரயாணிகளைக் கொள்ளையிடுவதற்காக வீற்றிருந்த ஸ்தலத்தை யணுகும்போழ்து கீழ்க்கண்ட கருத்தடங்கிய குர்ஆன் ஆயத்தை மேற்கூறிய 'காரீ' மிகவும் அழகான இனிய தொனியில் ஓதவாரம்பித்தார். ஆயத்தின் கருத்தாவது:—

"அல்லாஹு தஆலாவை நினைக்கும் பொருட்டும், அவனால் இறக்கி வைக்கப்பட்ட சத்திய வசனங்களின் பொருட்டும், அவர்களின் ஹிருதயம் அச்சப்படும்படியான நேரம் ஈமான் உள்ளவர்களுக்குச் சமீபிக்கவில்லையா ?" என்பதே. இவ்வாக்கியத்தைச் செவியுற்ற ஹஜ்ரத் புஷைலிப்னு இயாஸ் அவர்களின் ஹிருதயம் உருகிவிட்டது. அல்லாஹு தஆலாவின் கிருபாகடாக்ஷம் அவர்களுடைய ஹிருதயத்தையும், ஆத்மாவையும், கைவசப்படுத்தி விட்டன. ஆதலின்,

அக்ஷணமே அவர்கள் கொள்ளைத் தொழிலை விட்டொழித்து, தௌபாச் செய்து மீண்டார்கள். மேலும் தம்மால் துன்புறுத்தப் பட்ட ஒவ்வொரு நபரிடமும் தாமே நேரில் சென்று தம் குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டதோடு அவர்களுக்குத் திருப்தி யையளித்தார்கள். பிறகு மக்கமாநகரை யடைந்து வெகுகாலம்வரை பைத்துல்லாஹ்வில் வசித்து, பல பெரியார்களின் கூட்டுறவையும் பெற்று விசேஷ நன்மைகளை யெய்தினர்கள். பின்னர் கூபாவிற்குத் திரும்பி, அங்கு இமாம் அபூஹனீபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் சென்று நீண்ட காலம் அவர்களோடு தங்கியிருந்தார் கள். (இன்ஷா அல்லாஹ் நான் மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் புலைலிப்னு இயால் அவர்களின் ஜீவிய சரிததிரத்தை எழுதுகிறேன்.) இச்சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் புலைலுக்கும் கலீபாஹாருன் ரஷீதுக்கு மிடையில் நடந்த இனிய சம்பாஷணையை வரைகிறேன்.

ஒரு சமயத்தில் கலிபாஹாரூன் ரஷீத் தம்மந்திரியாகிய பஜ்லிப் னுரபீஆவோடு ஹஜ்ஜுச் செய்யும் பொருட்டு திருமக்கமா நகரம் சென்றார். ஹஜ்ஜு சம்மந்தமான கிரியைகளைச் செய்து பூர்த்தியான பின்னர் பஜ்லிப்னு ரபீஆ இடததில் அல்லாஹுதஆலாவின் உண்மை யான அடியார் (பெரியோர்)களிடம் தன்னை அழைத்துச் சொல்ல வேண்டுமென்றும் தான் அவர்களைக் கண்டு களிக்கவேண்டுமென்றும் கூற, அவ்வாறே, பஜ்லிப்னு ரபீஆ,கலீபாவை முதலாவதாக 'அப்துர் ரஜ்ஜாக் இஸ்பஹானீ' என்னும் பெரயாரிடத்திற்கு அழைத்துச் சென்றார். ஹாருன்ரஷீத் அப்பெரியாரிடத்தில் வெகு நேரம் சம்பாஷித்துவிட்டு விடை பெற்றுக்கொள்ளும் தருவாயில் கலீபா "தமது மந்திரியை நோக்கி இப்பெரியாருக்கு ஏதேனும் கடன் இருக்கிறதா" என்று கேட்கும்படி கூறினர். கலீபாவின் கட்டளைப் படி மந்திரி ஹஜ்ரத் அவர்களைக் கேட்கவே, ஹஜ்ரத் அவர்கள் தங்களின் கடனை யறிவித்தார்கள். உடனே ஹஜ்ரத் அவர்களின் கடனைத் தீர்ப்பதற்கு வேண்டுமளவு தொகை செலுத்திவிட்டு இரு வரும் விடைப்பெற்றுத் திரும்பினர்கள்.

கலீபா ஹாருன்ரஷீத் பஜ்லிப்னுரபீஆவை நோக்கி "ஓ பஜ்லே! என் ஹிருதயத்திலேற்பட்டிருக்கும் தாகம் தீரவில்லை. ஆதலின் மனத்திற்குத் திருப்தி யளிக்கத்தக்க மற்றொரு பெரியாரின் சமுகத் திற்கு என்னை அழைத்துச் செல்லும்" என்றார். பஜ்லிப்னு ரபீஆ கலீபா அவர்களை சுபியானிப்னு ஜனிய்யா என்னும் பெரியாரிடம் அழைத்துப் போனர். கலீபா அம்மகானிடத்திலும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, முன்போலவே ஹஜ்ரத் சுபியான் அவர்

களைப் பார்த்து "தங்களுக்கேதேனும் கடனிருப்பின் நான் அதை தீர்த்து விடுகிறேன்" என்றார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் ஆம், இன்ன மனிதனுக்கு இவ்வளவு கடன் கொடுக்கவேண்டி இருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆகவே, அக்கடனை கொடுத்து விட்டு இருவரும் திரும்பியபோது, கலீபா அவர்கள் பஜ்லிப்னு ரபீ ஆவைப் பார்த்து, "இன்னும் எனது நோக்கம் நிறைவேறவில்லை. ஆதலின் விசேஷமான மற்றொரு பெரியாரிடம் என்னை அழைத்துச் செல்லவேண்டும்" என்று கூறவே, பஜ்லிப்னு ரபீ ஆவுக்கு இச்சந்தர்ப்பத்தில் புலைலிப்னு இயால் அவர்களின் ஞாபகம் வந்தது. ஹஜ்ரத் அவர்கள் அக்காலத்தில் மக்காவில் வசித்து வந்தார்கள். ஆகவே, பஜ்லிப்னு ரபீ ஆவும், கலீபா அவர்களும் ஹஜ்ரத் புலைலிப்னு இயால் அவர்களிடம் சென்றார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் அவ்வமயம் திருகுர்ஆன்ஷரீபை ஓதிக்கொண்டிருந்தார்கள். ஓதி முடிந்த பின்னர் பஜ்லிப்னு ரபீ ஆ கதவைத் தட்டினார். உள்ளிருந்து "யார்" என்ற சப்தம் வந்தது. அமீருல் மூமினீன் விஜயம் செய்திருப்பதாய் தெரிவிக்கப்பட்டதும், ஹஜ்ரத் அவர்கள் "அமீருல்மூமினீனுக்கு என்னிடத்தில் என்ன வேலை!" என்றார்கள். பிறகு ஹஜ்ரத் புலைலிப்னு இயால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், பஜ்லிப்னு ரபீ ஆவுக்குமிடையில் சில சம்பாஷணைகள் நடந்து கடைசியாய் ஹஜ்ரத் அவர்கள் எழுந்து கதவைத் திறந்து, விளக்கை நூர்த்துவிட்டு ஒரு மூலையில் ஒளிந்துகொண்டார்கள்.

கலீபா ஹாரூன்ரஷீத் இருளில் மறைந்துநின்ற ஹஜ்ரத் அவர்களைக்கண்டு பிடித்தார்கள். உடனே ஹஜ்ரத் அவர்கள் "இத்தகைய மிருதுவான கரத்தை எனதாயுள் முழுவதிலும் கண்டதில்லை; மேலும், இது அல்லாஹுதஆலாவின் தண்டனையைவிட்டுத் தப்பிக் கொள்ளுமாயின் அதிருஷ்டம் வாய்ந்ததுதான்" என்று உருக்கமான தொனியில் கூறினார்கள். இதைக் கேட்ட ஹாரூன்ரஷீத்துக்கு அடக்க முடியாத அழுகை பொங்கி, பிரக்ஞை யற்றுப்போகும் வரையழுதார்கள். பிரக்ஞை வந்தவுடன் "ஹஜ்ரத் புலைல் அவர்களே! எனக்கு உபதேசம் செய்யுங்கள்" என்று ஹாரூன்ரஷீத் கேட்டுக் கொண்டதற்கேற்ப, ஹஜ்ரத் அவர்கள், "அமீருல்மூமினீனே! முஹம்மதுமுஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சிறிய தந்தையாகிய ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "என்னை பொது ஜனங்களுக்குத் தலைவராக்கிவிடுங்கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக்

கேட்டுக்கொண்ட போழ்து, நாயகமவர்கள் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "என் சிறிய தந்தையே! உங்களுடைய ஒவ்வொரு மூச்சையும் அல்லாஹுதஆலா உங்கள் தேகத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும் அமீராக படைத்திருக்கின்றான். ஆகவே, அல்லாஹுத ஆலாவை வணங்குவதற்காகச் செலவாகும் ஒரு மூச்சானது, ஜனங்கள் உங்களைக் கொண்டாடும் ஆயிர வருடத்தைக் காட்டினும் மேன்மையானதாகும். தலைமைப்பதவியை விரும்புவது கியாம நாளன்று வருந்தும்படிச் செய்யத்தக்கது, என்பதை ஞாபகத்திலிருத்திக் கொள்ளுங்கள்" என்று பெருமானார் அவர்கள் பதிலளித்ததாக ஹஜ்ரத் அவர்கள் அறிவித்தார்கள்.

"ஹஜ்ரத் புலைலே! இன்னமும் உபதேசியுங்கள்" என்று "கலீபா ஹாருன்ரஷீத்" கூறவே ஹஜ்ரத் புலைலிப்னு இயால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததாவது :—

உமரிப்னு அப்தல் அஜீஜுடைய குமாரர் கிலாபத்துப் பதவியை ஏற்றுக்கொண்டபோழ்து, சாலிமிப்னு அப்துல்லாஹ், ரஜாயிப்னு ஹயாத், முஹம்மதிப்னுகஅபு முதலியவர்களை யழைத்து, நானொரு சங்கடத்திற் சிக்குண்டு விட்டேன். ஆகவே, எனக்குத் தகுந்த யோசனைகளைக் கூறுங்கள். நான் பெரிய செல்வத்தை யடைந்து விட்டதாக ஜனங்கள் கருதுகின்றனர். ஆனால், நான் இதையொரு தொல்லையென்று கருதுகின்றேன்" என்று கூறியதும், அழைக்கப்பட்டிருந்தவர்களிலொருவர் "ஆண்டவனுடைய தண்டனையை விட்டும் நீர் தப்பித்துக் கொள்ளவேண்டுமாயின், முஸ்லிம் பெரியார்களை உமது தந்தையைப் போலவும், முஸ்லிம் வாலிபர்களை உமது சகோதரர்களைப் போலவும், முஸ்லிம் குழந்தைகளை உமது மக்களைப் போலவும் கருதுவீராக. உமது தந்தை, சகோதரர்கள், குழந்தைகள் ஆகியவர்களிடத்தில் நீர் நடந்து கொள்வதைப் போலவே அவர்களிடத்திலும் நடந்துகொள்வீராக. முஸ்லிம் நாடு முழுவதையும் உமது வீட்டைப் போலவும், அந்நாட்டிலுள்ளோரை உமது வீட்டாரைப் போலவும் கருத வேண்டும். உனது தந்தையைச் தரிசனம் செய். உனது சகோதரனை கண்ணியப் படுத்து. உனது மக்களிடத்து அன்புகாட்டு" என்று கூறியதை நான் உமக்கு ஞாபகப்படுத்துகிறேன். மேலும் அமீருல் மூமினீனே! உமது அழகிய இம்முகம் நரகத்தில் விழுந்து விடுமோவென அஞ்சுகிறேன். அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளும். அவனை ஒழுங்காய் வணங்குவீராக" என்று ஹஜ்ரத் அவர்கள் உபதேசித்தார்கள்.

ஹாரூன்ரஷீத் மீண்டும் "ஹஜ்ரத் புலேலே! தாங்கள் யாருக்காவது கடன் கொடுக்க வேண்டியிருக்கிறதா?" என்று வினவியதற்கு ஹஜ்ரத் அவர்கள் "ஆம், அல்லாஹ்வின் கடன் என் புறமுதுகின் பேரில் இருக்கிறது. அவனை வணங்க வேண்டிய வணக்கங்கள் பாக்கி இருக்கின்றன. இவைகளை யொட்டி என்னை பிடிப்பானாயின் கஷ்டமே" என்று அறிவித்தார்கள். மீண்டும் ஹாரூன்ரஷீத், ஹஜ்ரத் புலேலே! "மனிதர்களுக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய கடனிருக்கிறதா?" என்று கேட்டதற்கு ஹஜ்ரத் புலேல் அவர்கள் அல்லாஹுத ஆலாவுக்கு நன்றி நிறைவேற்றுகிறேன். அவன் எனக்கு விசேஷ செல்வத்தைக் கொடுத்திருக்கின்றான். என்று அறிவித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் ஆயிரம் தீனாரைக் கொண்ட (ஒரு தீனார் சுமார் இரண்டரை ரூபாய் 2-8-0) ஒரு பையை ஹஜ்ரத் அவர்களின் சமுகத்தில் வைத்து, "ஹஜ்ரத் புலேலே! இதை உங்கள் சொந்தச் செலவுக்காக வைத்துக் கொள்ளுங்கள்" என்று ஹஜ்ரத் அவர்களிடம் ஹாரூன் ரஷீத் கேட்டுக் கொண்டதற்கு, ஹஜ்ரத் அவர்கள் "அமீருல் மூமினீனே! என்னுடைய உபதேசம் உமக்குப் பயனளிக்கவில்லை. ஆகவே, இதோ அநியாயத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டீர். என்று கூறவே, "ஹாரூன்ரஷீத்" ஹஜ்ரத் புலேலே! நான் செய்த அநியாயமென்ன? வென்றார். இதற்கு ஹஜ்ரத் புலேல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நான் உம்மை விடுதலையின் வழிக்கழைக்கிறேன். ஆனால் நீர் என்னை சங்கடத்தில் தள்ள விரும்புகிறீர். இது அநியாயமல்லவாயின் வேறுதானென்ன? என்றார்கள்.

இதற்குப் பிறகு ஹாரூன் ரஷீதும் அவருடைய மந்திரியான பஜ்லிப்னு ரபீஆவும் கண்ணீர் சொரிந்தவர்களாய் வெளிப்புறப்பட்டனர். மேலும் "ஹஜ்ரத் புலேல் அவர்கள் உண்மையிலேயே அப்பதத்தின் கருத்திற்கிணங்க புலேலாகவே இருக்கின்றார்கள்." என்று ஹாரூன் ரஷீத் கூறினர். (புலேல் என்றால்:—மேன்மையானவர் என்று பொருள்படும்.)

ஸூபி

உஜூமுத்தீனும், முஸ்லிம் அத்வைத மூலமொழியும் மறுக்கப்படுகின்றன.

வேலூர் உலமாக்களால் தமிழில் கொடுக்கப்பட்ட பத்வா.

வினா:—கனம் தங்கிய உலமாக்களே! கீழக்கரை, சய்யிது அஹமது கபீர் என்பவர் உஜூமுத்தீன் என்னும் அரபுத்தமிழ் கிதாப்பையும், நெல்லிக்குப்பம் அப்துர் ரஹ்மான் சாயபு என்பவர் முஸ்லிம் அத்வைத மூலமொழி, அத்வைதஞான உணர்ச்சிக்கு அஸ்திவாரம் என்ற

இரண்டு புஸ்தகங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். அம்மூன்று கிதாபுகளிலும் மார்க்கமுரண்பட்ட விஷயங்கள் பல எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகின்றன. அவற்றில் சிலதை மட்டும் கீழே குறித்திருக்கிறோம். கற்றுணர்ந்த கல்விமான்கள் அவற்றை பார்வையிட்டு தக்க ஆதாரங்களுடன் பதில் அளித்து அதற்குள்ள நற்கூலியை அல்லாஹுத்த ஆலா இடம் பெற்றுக் கொள்வீர்களென கேட்டுக்கொள்கிறேன்.

சந்தேக வினாக்கள்.

குப்பார்கள் முஷ்ரிக்குகள் வணங்குகிற ஒருநாயனும் அல்லாஹ் என்ற பராபரவஸ்துவை தவிர உள்ளதல்ல. (உலூமுத்தீன் 181)

ஆகவே லாஇலாஹ இல்லல்லாஹுவின் ஹக்த ஆலா நாடிய பொருளாவது லாஇலாஹ—ஒரு இலாஹுமில்லை (அதாவது விக்கிரகங்கள், சிலைகள், உருவங்கள் முதலியவைபோல் எவற்றின்மேல் இலாஹ் என்ற பதம் வழங்கப்படுகிறதோ அந்த இலாஹுகளில் ஒன்றேனுமில்லை) கைருல்லாஹி-அல்லாஹ்வின் வேறாய்-இல்லல்லாஹு-அல்லாஹ்வாகவே யன்றி(முஸ்லிம் அத்வைத மூலமொழி-64) எல்லா மௌஜூதும் அல்லாஹ்வாய் இருக்கும்போது விக்ரஹாதி மஃபூதுகளான மௌஜூதுகள் மாத்திரம் அல்லாஹ்வுக்கு வேறாய் இருக்குமோ? எல்லாம் அல்லாஹ்தான் என்பதில் அவைகளும் அல்லாஹ்தான் என்கிற அர்த்தம் விளங்கவில்லையா? (அத்வைத ஞான உணர்ச்சிக்கு அஸ்திவாரம் 23)

குப்பார்கள் இணை வைத்திருக்கிற வஸ்துவை ஹக்கல்லாத்தது என்று நிர்ணயம் கொண்டாலும் ஹக்கு வேறே அதுகள் வேறே என்றாலும் ஹக்குக்கு இணைவைத்துப்போடும், (உலூமுத்தீன் 128) அல்லாஹுத்த ஆலாவுக்கு அன்னியமாக ஒருபொருள் உண்டென்று எண்ணுவதும் அல்லாஹுத்த ஆலாவுக்கும் இலாஹுகள் முதலான இதரசிருஷ்டிகளுக்கும் நடுவில் வேறு பிரித்து அவன் வேறு அவை வேறு என்று சொல்லுவதுமாகிய இதுதான் ஷிர்கருக்கு முக்கிய காரணமாய் இருக்கிறதென்று வெளியாயிற்று (மு. அ. மூ. மொ. 39) இஸ்லாம் மார்க்க மூலமந்திரமாகிய லா இலாஹ இல்லல்லாஹு என்கிற கலிமாவில் விக்கிரஹாதி தெய்வங்கள் முதல் சர்வ சிருஷ்டியும் அவனாய் இருக்கிற சத்தியத்தை ஸ்தாபித்து அதை எல்லா ஜனங்களும் ஆரம்பத்திலேயே பரோக்ஷமாக அங்கீகரிக்குமாறு அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். (அ. ஞா. அ. 20, 21)

(பாங்கு துஆவில் கூறப்பட்ட மகாமெம்மஹ்மூதாவைப் பற்றி கூறுவதாவது) அந்தப்பதவியாவது ஹக்சுபுஹானஹூ வதஆலாவா கிறவன் நாயகம் முஹம்மது (சல்) அவர்களாக கியாமத்து நாளையில் வெளியாகி விடுவதுதான் மகாமெ மஹ்மூதா என்கிற பதவியும், ஜாத்துடைய சுவர்க்க லோகமுமாய் இருக்கும் (உ. தீன். 284)

அல்லாஹுத்த ஆலாவையும் மற்ற வஸ்துக்களையும் வேறு பிரித்து அவன் வேறு அவை வேறு என்பதின் பேரில் அறவே குர் ஆனும் அறிவிக்காது. யாதொரு ஹதீதும் அறிவிக்காது (மு. அ. மூ. மொ. 52.)

கைசேதத்திலும் பெரிய கைசேதம் என்னவென்றால் திடனுகை பெரியபெரிய உலமாக்களில் நின்றும் மேல் நாட்டார், கீழ் நாட்டார், சலபுகள், கலபுகள், முஹத்திதுகள், முபஸ்ஸிர்கள், முஜ்தஹிதுகள், முகல்லிதுகள், முதகல்லிமுகள், முதபக்கிஹுகள் இவர்கள் எல்லோரும் அல்கலிமதுத்தையிபாவை அதன் தானங்களில் நின்றும் புரட்டி விட்டார்கள். இன்னும் அதை முஹ்கமில் நின்றும் முதஷாபிஹின் பக்கம் திருப்பி விட்டார்கள். இன்னும் அதில் பொதிந்துள்ள பொருளை கெட்ட பொருளாக பேதகப்படுத்தி விட்டார்கள். (மு. அ. மூ. மொ. 32, 33.)

(அப்துல்லா இப்னு அபீபக்கரிஸ்ஸராந்தீலி) விடை

வினவிற் கண்டுள்ளவைகளி லொவ்வொன்றும் இஸ்லாம் மார்க்கத்திற்கே முற்றும் விரோதமானவைகள். நமது இஸ்லா மார்க்க மூல கிரந்தங்களாகிய திருக் குர்ஆனிலும், ஹதீது நூல்களிலும் இவற்றிலொன்றுக்கும் சான்று கிடையவேகிடையாது. நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றி நடந்த சஹாபாக்கள், தாபிஈன்கள், தபவுத்தாபிஈன்கள், முஜ்தஹிதுகள் முதலிய இஸ்லாம் மார்க்க மேதாவிகளின் வார்த்தைகளிலாவது அன்றி அன்னாரின் அனுஷ்டான முறைகளிலாவது இப்போலிக் கொள்கைகளைக் காணமுடியாது.

(தொடரும்)

முஸ்லிம் உலகமகா நாடு.

மக்கமாநகரில் துல்கஃதா மீ 26உ ஆரம்பமான முஸ்லிம் உலக மகாநாடு ஹஜ்ஜை முன்னிட்டும், துருக்கி, ஆப்கன் பிரதிநிதிகளின் வருகையை எதிர்பார்த்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை சகலரு மறிவர்.

ஆப்கன் பிரதிநிதிகள் ஹஜ்ஜுக்கு முன்னர் வந்து சேர்ந்து விட்டதாயும், ஹஜ்ஜு முடிந்தபிறகு துருக்கிப் பிரதிநிதிகள் மக்கமா நகரை யடைந்ததாயும், 27-6-26-ல் மகாநாடு மீண்டும் ஆரம்பமாயிற் றென்றும் பத்திரிகைகள் கூறுகின்றன.

மகாநாட்டிற்கு 157 பிரதிநிதிகள் வந்திருப்பதாயும், நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறவில்லை என்றும், தணிக்கை செய்யப் பட்ட பின்னரே செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றும், மகா நாட்டையொட்டிய செய்திகளுள் வெளியிடத்தக்கவைகளையே வெளி யிடவேண்டுமென்று ஏர்க்கனவே முடிவு செய்யப்பட்டிருப்பதாயும், தீர்மானங்கள் பல நிறைவேறி இருக்கின்றனவென்றும், ஜித்தா, மக்கமாநகரம், அரபாத் ஆகியவைகளைச் சார்ந்த பாதைகளைச் சீர் திருத்தி யமைக்கவேண்டுமென்றும், முஸ்லிமல்லாதார்க்கு அரேபி யாவில் எத்தகைய உரிமையும் இருந்துவரக்கூடாதென்றும், மகா நாடு முடிவு செய்திருப்பதாயும், கலீபாவைத் தேர்ந்தெடுப்பது கிலா பத்தின் ஒழுங்குமுறை ஆகிய முக்கிய விஷயங்களும் அனேகமாய் மகாநாட்டின் ஆலோசனைக்கு வருமென்றும், ஷைக்ஸனூஸீ, ஆப்கன் அமீர், எகிப்தின் சுல்தான், சுல்தான் இப்னுஸஊத் முதலிய பல பெரியார் கிலாபத்துப் பதவிக்கு அபேக்ஷகர்களாக இருப்பார்க ளென்று எதிர்பார்க்கப்படுகிறதென்றும், மகா நாடு நாளது ஜூலை மீ 5உ முடிவடைந்து 7உ கிலாபத்துப் பிரதிநிதிகள் மதினமா நகருக் குச் செல்வார்களென்றும், மக்கமா நகரிலிருந்து சில பத்திரிகைப் பிரதிநிதிகள் அறிவிக்கின்றனர்.

மகாநாட்டிற்கு விஜயஞ் செய்திருக்கின்ற பிரதிநிதிகள் 85 என் றும், இந்தியாவுக்கு (4) துருக்கிக்கு (3) ஹிஜாஸுக்கு (3) ஆப்க னுக்கு (2) நஜ்துக்கு (2) ஓட்டுரிமைகள் கிடைத்திருப்பதாயும் கிலாபத்து பத்திரிகையின் மூலமாய் அறிகிறோம்.

ஸையிதினா அமீர்ஹம்ஜா ரலியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா ஹஜ்ரத் உதுமான் ரலியல் லாஹு அன்ஹு முதலிய அநேக பெரியார்களின் கோரிகள் பல ஞாபகச்சின்னங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன என்றும் இதை யொட்டி சுல்தான் இப்னுஸஊத் அவர்களை கிலாபத்துப் பிரதிநிதி கள் கேட்ட கேள்விகளுக்கு சுல்தான் அவர்கள் சரியான விடை பகர வில்லை என்றும் வந்துகொண்டிருக்கின்ற செய்திகள் முஸ்லிம்களின் ஹிருதயங்களை வாட்டுகின்றன.

முஸ்லிம் உலகிற்கும் புண்ணிய ஸ்தலங்களுக்கும் இம்மகாநாட் டின் மூலமாய் அல்லாஹு தஆலா நன்மையளிப்பானென்று நம்பி யிருக்கின்றோம்.